


# ஓடிசம் குழந்தைகளும் அவர்களது குடும்பமும்

## அத்தியாயம் 08



Dr. எஸ்.தேவாநந்தன்
(Chairman,
OSILMO Autism Center)

**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அப்படியாயின் Autism குழந்தைகளுக்கும் அதே போன்ற மற்றைய Special Need Children களிற்கும் வழிபிறக்குமா? நிச்சயமாக வழி பிறக்கும். நாம் ஒவ்வொருவரும் மனம் வைத்தால் அவர்களிற்கும் நல்ல ஒளிமயமான வாழ்க்கையை காண்பிக்க முடியும். இருட்டை இல்லாது ஒளிக்க முடியாது. ஆனால் ஒரு மெழுகுதிரியையோ, விளக்கையோ பற்ற வைப்பதன் மூலம் இருட்டிலும் ஒளியை உருவாக்க முடியும். அதே போன்று விசேட பிள்ளைகளின் முக்கியமாக ஓடிசம் குழந்தைகளின் இருளிலும் ஒளியை உருவாக்குவதற்கு பெற்றோரும் குடும்பத்தவரும் ஆசிரியர்களும் சமூகமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

முக்கியமாக ஓடிசம் குழந்தைகளின் பெற்றோர் உங்களது பிள்ளைகளை சொந்தத்திற்கும், சமூகத்திற்கும் பயந்து ஒளித்து வளர்ப்பதை விட்டு வெளியே கொண்டு வாருங்கள். மனம் திறந்து கதையுங்கள். வழிமுறைகளை தேடுங்கள். ஆராய்ந்து பாருங்கள். விடா முயற்சி செய்யுங்கள். நிச்சயமாக இறைவன் உங்களிற்கும் நல்ல வழியை காண்பிப்பார். ஓடிசம் குழந்தைகளை பொறுத்தவரையில் அவர்களின் சிறுவயதில் அவர்களை அடையாளம் காண்பது மிக முக்கியமான விடயமாகும். அன்றிலிருந்து சரியான பயிற்சிகளை தேவையானவிடத்து அவர்களிற்கு கொடுப்பதன் மூலம் அந்த பிள்ளைகளின் வாழ்க்கையிலும் ஒளியேற்ற முடியும்.

பலரது அபிப்பிராயம் நாள் செல்ல செல்ல இந்த குழந்தைகள் சாதாரண நிலைமைக்கு வந்து விடுவார்கள் என்பதாகும். இதன் காரணமாக பெற்றோரிற்கு சொல்லுவது ''ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உங்கள் பிள்ளை ஐந்து ஆறு வயது வரும் போது சரியாகிவிடுவார்'' ''எங்கள் பக்கத்து வீட்டிலும் இவ்வாறு ஒரு பிள்ளை இருந்து சரியாகிவிட்டார்'' ''எங்கள் மாமாவின் பிள்ளையும் இவ்வாறு இருந்து சரியாகிவிட்டார்'' என்று எத்தனையோ உதாரணங்களை சொல்லி பெற்றோர்களின் முயற்சிகளை மளுங்கடித்து விடுவார்கள். அது நான் சொல்லும் விடயம் இல்லை.






உண்மையிலேயே எத்தனையோ பாதிக்கப்பட்ட பெற்றோர் சொன்ன கருத்துக்களாகும். இதன் காரணமாக பெற்றோர் பிள்ளைகளிற்கு பிரச்சினை இருக்கிறது என்று தெரிந்தும் கவனயீனமாக வைத்திருப்பதன் மூலம் ஐந்து ஆறு வயதை அடைந்ததும் பாடசாலைக்கு அப்பிள்ளையை அனுப்ப முடியாது போகும் போதே யோசிக்க தொடங்குகிறார்கள்.

அங்கு பாருங்கள் சொல்பவர்கள் அந்த நேரத்திற்கு ஏற்றாற்போல் எதையும் சொல்லி விட்டு சென்று விடுவார்கள். ஆனால் கடைசியில் வேதனைப்படுவது யார்? உங்கள் வேதனையில் அவர்கள் வந்து பங்கெடுப்பார்களா? எனவே பெற்றோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளை பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டும்.

உங்களிற்கு தெரியுமா போலியோவால் குச்சி ஊன்றி நடந்த வில்மா ருடால்ஃப் என்ற அமெரிக்க பெண் 1960ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் ஓட்டப்பந்தயத்தில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். அதாவது 100 மீட்டர் தூரத்தை 11.5 விநாடிகளிலும் 200 மீட்டர் தூரத்தை 24 விநாடிகளிலும் 400 மீட்டர் தூரப் போட்டியில் 44.5 விநாடிகளிலும் ஓடி வந்து மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார். எழுந்து நடக்கவே முடியாதவர் என்று கூறி டாக்டர்களால் கைவிடப்பட்ட வில்மா ருடால்ஃப் சாதித்தது அவரின் முழு முயற்சியாலும் விருப்பத்தினாலும் தான்.

எனவே பெற்றோராகிய உங்களிற்கு நான் கூறிக்கொள்ள விரும்புவது விடா முயற்சியும் திடமான நம்பிக்கையும் ஆழ்ந்த அசையாத நினைப்பும் இருந்தால் நிச்சயமாக உங்கள் பிள்ளையையும் சாதாரண நிலமைக்கு கொண்டு வர முடியும்.

சில குடும்பங்களின் மூன்று நான்கு பிள்ளைகள் இருப்பார்கள். அதில் ஒரு பிள்ளை ஓடிசம் பிள்ளையாக இருப்பின் அந்த பிள்ளையை மற்றைய பிள்ளைகள் ஒதுக்கி வைக்க முற்படுவார்கள். அதாவது விளையாடும் போது சேர்த்து விளையாடுவதில்லை. படிக்கும் போது மேசைக்கு கிட்டவே வர விட மாட்டார்கள். இவ்வாறு பல வேளைகளில் இப்பிள்ளைகள் ஒதுக்கப்படுவது சில குடும்பங்களில் நடக்கிறது. இங்கு பெற்றோர் மிகவும் கவனமாக



இருக்க வேண்டும். அதாவது சாதாரண பிள்ளைகளிற்கு இந்த பிள்ளையின் பிரச்சினைகளை விளக்கப்படுத்தி அந்தப் பிள்ளையும் உங்கள் சகோதரம் தானே அவரையும் உங்களில் ஒருவராக சேர்த்து விளையாட வேண்டும் என்று விளக்கப்படுத்தி சொல்லி கொடுக்க வேண்டும்.

முக்கியமாக இவ்வாறான விசேடமான பிள்ளைகளிற்கு குடும்பங்களில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். எது செய்யும்போதும் அந்த பிள்ளையையும் கருத்தில் கொண்டு அவரிடமும் இது செய்வது சரியா பிழையா என்று அவரின் முடிவுகளையும் கருத்தில் கொள்வதன் மூலம் அந்த பிள்ளையின் ஆளுமை வளர்க்கப்படுகின்றது. அதே போன்று சாப்பிடும் போது எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிட வேண்டும். முக்கியமாக அந்த பிள்ளையை ஒன்றாக வைத்து சாப்பிட வேண்டும். மற்ற பிள்ளைகள் படிக்கும் போது இந்த பிள்ளைக்கும் ஒரு கதிரையை கொடுத்து அவர்களுடன் சமமாக வைத்து ஏதாவது நிறந்தீட்டவோ அல்லது அப்பிள்ளையால் செய்யக்கூடிய ஒரு விடயத்தை செய்யவோ விடவேண்டும்.



சில வீடுகளில் இவ்வாறான விசேடமான பிள்ளைகளை எல்லோரும் ஒன்றாக கூட இருக்கும் இடங்களில் வைத்து அந்த பிள்ளையை ஏதாவது செய்ய சொல்லி அந்த பிள்ளையில் உள்ள குறைப்பாட்டை வைத்து சேட்டை செய்வது கேலி செய்வது போன்றன நடைபெறுகின்றன. இது மிகவும் தவறான ஒரு செயற்பாடாகும். சிலர் நினைப்பது நாம் விளையாட்டுக்குத்தானே இவ்வாறு செய்கிறோம் என்று அது நாளடைவில் அந்த பிள்ளைகளின் மனநிலையை மேலும் மேலும் பாதிப்படையக்கூடிய விடயமாக மாறிவிடும். எனவே அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி கொள்ள வேண்டும்.




இதேபோன்று சொந்தங்கள் கூடியிருக்கும் வேளையிலோ நண்பர்கள் சேர்ந்திருக்கும் இடத்திலோ இவ்வாறான குழந்தைகள் மேற்குறிப்பிட்டவாறு பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் நமது சமுதாயத்தில் அன்றாடம் நடைபெற்ற வண்ணமே உள்ளன. இங்கு இவ்வாறு பலர் கூடியிருக்கும் வேளைகளில் அவர்களின் Time Passing இற்கு தலைப்பு இந்த பிள்ளையாகவே இருப்பர். அதுமட்டுமன்றி சில வளர்ந்த ஓடிசம் பிள்ளைகள் வீதியில் செல்லும்போதோ அல்லது வேறு இடங்களிலோ அந்த ஊரில் இருக்கும் பலரினால் எத்தனையோ விதமான சேட்டைகளிற்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

இங்கு இப்பிள்ளைகளின் பெற்றோர் எத்தனை தடவை மன வேதனைப்பட்டிருப்பார்கள். எத்தனை தடவை மனதிற்குள் அழுதிருப்பார்கள். வெளியில் சிரித்துக் கொண்டு மனதிற்குள் அழுதுக் கொண்டிருக்கும் எத்தனை பெற்றோர் நமது சமுதாயத்தில் இருக்கிறார்கள். எனவே முதலில் நாம் ஒவ்வொருவரும் ஆறு அறிவு படைத்த மனிதர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி அந்த இடத்தில் நமக்கு இவ்வாறான சேட்டைகளை வேறு யாராவது செய்தால் நாம் பொருத்துக் கொள்வோமா? என்று சிந்தித்துப்பாருங்கள். அவ்வாறு சிந்தித்தாலே நாம் இவ்வாறான செயற்பாடுகளை செய்யாது விட்டு விடுவோம். அதுவே நீங்கள் ஓடிசம் பிள்ளைகளிற்கு செய்யும் மிகவும் பெரிய உதவியாகும்.

**web:www.osilmo.com**

(தொடரும்)